# விவிலிய வினாடி வினா
## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

எதெல்பெர்காமேரி OSM, எ∴ப்ராசியா மேரி FSAG, ரெஜினா மேரி FIHM, வெர்ஜின் OSM – திருச்சி; ஸ்டெல்லா ரோஸ் CIC, மிரியம் CIC, மேரி செசாரியா, லூர்து மேரி CIC – சென்னை; செலின்- SJC, சின்னராணி SJC - அணிலாடி; டொனட்டெல்லா அனஸ்தாசியாள் FIHM, அல்போன்ஸ் FIHM, அருள்மேரி FIHM, அனன்சியா மேரி FIHM, ஆக்னஸ் FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்; லில்லி இஸபெல்லா மேரி OSM – மதுரை; அருள் சீலி SSAM – நாகர்கோவில்; வித்யா மேரி OSM, ரூபெல்லா மேரி OSM – நெல்லை; புஷ்பம் FSAG – சிந்தாமணி; மார்சலோஸா மேரி OSM – பழையகாயல்;சலேத்மேரி FSAG – தாராபுரம்; ரூபி மேரி OSM – தோகைமலை. ஜெயா FSJ - கள்ளக்குறிச்சி, ரோஸ்லின் OSM - மணிகண்டம், செபாஷ்டி - விழுப்புரம், மோட்ச புஷ்பராணி - நாகை, அருள் அமலா- OSM, லிரல், St. Mary's Mat. School

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், சந்தனம், ஜான் ஜோசப், செலின் மேரி, மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா லூத்தியா மேரி, ஞான சேகரன்– திருச்சி; இருதய விஜிலா திண்டுக்கல்; வியாகுலம், மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்னு, மிக்கேல்சாமி – கோவை; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. மோட்ச புஷ்பராணி நாகை**

**ரூபியா மங்கலக்குன்று**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# அர்ப்பணம்
## பதிப்பாசிரியர் பக்கம்


**ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**

தன்னையே முழுமையாக இறைவனுக்கு ஒப்புக் கொடுப்பதுதான் அர்ப்பணம். இந்த அர்ப்பண வாழ்க்கையை வாழ்வதற்கு சொந்த விருப்பு வெறுப்புக்களை கைவிட்டாக வேண்டும். இறைவன் விருப்பத்தின்படி வாழ வேண்டும்.

இந்த நவம்பர் மாதத்தில் அன்னை மரியாள் கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட திருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். இஸ்ரயேல் கலாச்சாரத்தில் குழந்தைகள் கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்படுவது என்பது நடைமுறையில் இருக்க்கூடிய கலாச்சாரம்தான். இவ்வாறு குழந்தைகள் கோவிலில் ஒப்புக் கொடுக்கப்படும்பொழுது குடுப்பத்தின் வசதிக்கேற்ப ஆட்டினையோ, புறாக்களையோ காணிக்கையாகக் கொடுத்து குழந்தைகளை மீட்டு வருவார்கள். ஆண்டவர் இயேசு கோவிலில் ஒப்புக் கொடுக்கப்பட்டபோதுகூட அன்னை மரியாளும் புனித யோசேப்பும் இரண்டு மாடப்புறாக்களைக் காணிக்கையாகக் கொடுத்து இயேசுவை மீட்டு வந்தார்கள்.



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| புனித கன்னிமரியாவை அர்ப்பணித்தல் | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| குடும்ப வாழ்வில் மரியா | - 28 |
| கல்லறைத் தீபாவளி | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

அர்ப்பணம் நமக்கு சொல்லித் தரும் பாடம், அர்ப்பணிக்கப்படுபவர் கடவுளுக்கு சொந்தமானவர். ஆகவே அவரின் சொல், செயல் அனைத்தும் கடவுளின் விருப்பத்திற்கேற்ப இருக்க வேண்டும். இங்கு அன்னை மரியாள் அர்ப்பணிக்கப்படுகின்றார். அதனால்தான் சிறுவயதுமுதல் கடவுளின் விருப்பத்திற்கேற்ப வாழ்ந்து கடவுளின் அன்பை பெற்றவராக இருக்கின்றார். கடவுளின் விருப்பத்தின்படி வாழ்ந்த ஒரே காரணத்தினால்தான் கபிரியல் தூதர் அன்னை மரியாளிடம் விருப்பத்தைக் கேட்டபோது, “இதோ ஆண்டரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்.” என்று கடவுளின் விருப்பத்திற்கு ‘ஆம்’ என்று கூறுகின்றார்.

நம் அன்னை மரியாள் சாதாரணக் குழந்தை அல்ல பல வருட காத்திருப்புக்குப்பின் ஜோக்கின் அன்னம்மாவுக்குப் பிறந்த அதிசயக் குழந்தை. அதனால்தான் தங்களுக்கு குழந்தை வரம் கொடுத்த கடவுளுக்கு நன்றியாக அந்தக் குழந்தையைக் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கின்றார்கள். இந்த மரியாள் என்ற அதிசயம்தான் ஆண்டவர் இயேசு என்னும் பேரதிசயத்தை வயிற்றில் சுமந்து உலக மக்களுக்கு மீட்பினைத் தந்தது. இந்த மரியாள் என்ற அதிசயக் குழந்தை நம் ஒவ்வொருவரையும் அர்ப்பண வாழ்க்கை வாழ அழைப்பு விடுக்கின்றது.

அர்ப்பண வாழ்க்கை என்பது கடவுளைச் சார்ந்து வாழ்வது, செல்வத்தினை சார்ந்து அல்ல. அது அழிந்து போகக்கூடியது. மனிதர்களை சார்ந்து அல்ல. அவர்களும் அழிந்து போகின்றவர்கள். பதவிகளைச் சார்ந்து அல்ல. அதுவும் அழிந்து போகக்கூடியது. ஒன்றே ஒன்று நம்மிடம் அழியாது, அது நம் ஆன்மா. அந்த ஆன்மாவினை காப்பாற்றிக் கொள்ள அழிவில்லாத கடவுளைச் சார்ந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

அர்ப்பண வாழக்கை என்பது சுயநலன் இல்லாது பொதுநலனில் அக்கறைக் கொண்டு வாழ்வது. அன்னை மரியாளைப் போல வாழ்வது. ஆண்டவர் இயேசுவைப் போல வாழ்வது. அர்ப்பண வாழ்க்கை என்பது தனக்காக வாழ்வது அல்ல பிறருக்காக வாழ்வது. ஆண்டவர் இயேசு தனக்காக வாழவில்லை, நமக்காக வாழ்ந்தார். தனக்காக சாகவில்லை நமக்காக சாவினை ஏற்றுக் கொண்டார். நமக்கு மீட்பு என்னும் கொடையைக் கொடுக்க கடவுள் நிலையில் இருந்து மனித நிலைக்கு இறங்கி வந்தார். இது அர்ப்பணத்தின் வெளிப்பாடு.

**அன்னை மரியாளின் அர்ப்பணம் இயேசுவை நமக்கு தந்தது. இயேசுவின் அர்ப்பணம் மீட்பினை நமக்கு தந்தது. நம் அர்ப்பணம் எதைத் தரப் போகின்றது?**





உளைச்சலுக்கு உள்ளானேன். மேலும் நாங்கள் இந்துக் குடும்பம். மாதாவை நோக்கி நான் மன்றாடினேன். மாதாவின் அருளால் பிப்ரவரி மாதம் எனக்கு குழந்தை வரம் கிடைத்தது. குழந்தை வரம் கொடுத்த மாதவிற்கு நன்றி கூறும் வகையில் எனக்கு சீமந்தம் முடிந்தவுடன் மாதவிடம் வந்துள்ளேன்.

## 8 ஆம் பக்க தொடர்ச்சி

இருக்க வேண்டும். இயேசுவைப் போன்று, அன்னை மரியாவைப் போன்று தேவையில் இருப்போர். ஏழைகள், வறியோர், குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் வாழ்வில் நம்பிக்கை, அன்பு, மகிழ்ச்சி என்ற தீபங்களை ஏற்றுபவர்களாக நாம் மாற வேண்டும் . இதுதான் அர்ப்பணம், மலர்வது, மணம் பரப்புவது. அர்ப்பண வாழ்வு நமக்காக அல்ல மாறாக அனுப்பப்பட்ட நற்செய்தியை அனைவருக்கும் எடுத்துச் சொல்ல அனைவருக்கும் சுகம் நல்க. இத்தகைய அர்ப்பண வாழ்வை வாழ்ந்தவர் அன்னை மரியா.

மூன்றாவதாக, அர்ப்பண வாழ்வில் நாம் சிந்திப்பது தியானம். அர்ப்பண வாழ்வு மிக எளிதானது அல்ல. மாறாக துன்பங்கள், சிலுவைகள் நிறைந்தது. இயேசு தன்னைப் பின்பற்றுவோரை நோக்கிக் கூறுகிறார். எனது சீடன் தனது சிவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின் தொடரட்டும். அர்ப்பணித்தோர் மற்றவர்களுக்காக குரல் கொடுப்பதால், மற்றவர்களுக்காக நிலைப்பாடு எடுப்பதால் நிச்சயம் வெறுப்பை, பகைமையை சம்பாதிக்க வேண்டும். இயேசுவைப் போன்று புறக்கணிக்கப்படுவோம். ஆனால் அனைத்து சூழலிலும் இறைவன் அர்ப்பணித்தோரை அருளுடன், அன்புடன், அக்கறையுடன் வழிநடத்துகிறார். சுமைகளை சுகங்களாக மாற்றும் இயேசுவின் பாதையில் துணிவுடன் அர்ப்பணித்தோர் பயணிக்கின்றனர்.

நான்காவதாக, அர்ப்பண மனநிலையில் வாழும் கிறிஸ்தவர்கள் பயணம் செய்யும் திருச்சபையின் புனிதத்தில் தங்களின் பங்களிப்பைத் தருகின்றனர். திருச்சபை புனிதமானது. ஆனால் அதில் பாவிகளும் இருக்கின்றோம். இச்சூழலில் தங்களின் இறை, பிறரன்பு செயல்களினால் தூய உள்ளத்தோர் திருஅவையில்˙ புனிதத்தை ஆதரிக்கின்றனர். விண்ணக உரிமைப் பேற்றை அடைய விரைகின்றனர். இவாக்ள் தாங்கள் வாழும் சமுதாயத்தில், தலத் திருஅவையில் ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக இருப்பதனால் மற்றவர்களும் இவர்களின் வாழ்வினால் மாற்றம் அடைகின்றனர். அவர்களின் வாழ்வு மாறி, அனைவரும் சாட்சிய வாழ்வு, புனித வாழ்வு வாழ்கின்றனர்.

**நிறைவுரை**

இறைவனைத் தன் உதிரத்தில் தாங்கிய ஆலயமான அன்னை மரியா, இறைவனின் உறைவிடம் என கருதப்பட்ட எருசலேம் ஆலயத்தில் ஒரு காணிக்கையாக அர்ப்பணிக்கப்படுகிறார். குழந்தை மரியா பயபக்தியுடன், குருக்கள் இட்ட பணியைச் செய்வதிலும், வேதத்தை, திருநூல்களை வாசிப்பதிலும் தியானிப்பதிலும் எடுத்துரைப்பதிலும் தனது குழந்தைப் பருவத்தை செலவழித்தார். இன்றைய கத்தோலிக்க தாய்மார்கள் இக்குழந்தை போன்று தங்களின் குழந்தைகளை வளர்க்க வேண்டும். பயிற்றுவிக்க வேண்டும். பெற்றோர்கள் வழியாக குழந்தைகள் பிறந்திருக்கலாம். ஆனால் அவாகள் இறைவனுக்கு சொந்தமானவர்கள். ஒவ்வொரு பருவத்திலும் இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவருக்குப் பிரியமான குழந்தைகளாக வாழ வேண்டும் என்பது அவரின் விருப்பம். அவர்களைக் கவனிக்க, பாதுகாக்க காவல்தூதர்களை நியமித்துள்ளார். ஆண், பெண் அனைத்து குழந்தைகளையும் போற்றுவோம். அர்ப்பண மனநிலையுடன் அவர்களை வளர்த்து அர்ப்பண வாழ்வுக்கு அவர்களை அர்ப்பணிப்பது அன்னை மரியாவின் அர்ப்பணிப்பு விழா தரும் செய்தியாகும். இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்தோர் அவர்களின் அர்ப்பண விழாவை இன்று சிறப்பிக்கின்றனர். இன்றைய சூழல், அர்ப்பண மனநிலையிலிருந்து சிதறடிக்கக் காத்திருக்கின்றன. அழைத்த இறைவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்போம். இளம் உள்ளங்கள் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க ஆண்டவரை மன்றாடுவோம்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. ஜே. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வழக்கம்போல் பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**குளோரி – வில்லிவாக்கம்**

என் மகள் கருவுற்று இருந்தும் இரத்தக் கசிவு ஏற்பட்டது. மருத்துவரிடம் சென்று பார்த்தோம். அவர் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள் என்றார். நான் ஜீவ மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். அதே போன்று என் மகளுக்கு நல்ல முறையில் குழந்தை பிறந்தது. பின்பு குழந்தை வளர்ந்து வரும்பொழுது தலையிலே அடிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் என் மகளுக்கு குழந்தை வரம் தந்த ஜீவமாதவிற்கு நன்றியும் என் பேரனுக்கு எந்த அடியும் படாமலிருக்க மாதா அருள் செய்ய வேண்டுமென்று மன்றாடுகிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஞானசெல்வி– சோழிங்கநல்லூர்**

என் மகளுக்கு பல வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. ஜீவமாதாவிடம் தொடர்ந்து வேண்டினேன். இப்பொழுது என் மகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்திருக்கின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**நான்சி – சோழிங்கநல்லூா**

என் மகன் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் எடுக்க வேண்டுமென்று மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். அதேபோல் தேர்வில் அதிக மிப்பெண் பெற்றான். மேலும் நுழைவுத்தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்ததால் அவனுக்கு விரும்பிய பாடப்பிரிவு கிடைத்ததற்காகவும், தான் விரும்பியதெல்லாம் அன்னையவள் அருள் புரிந்ததற்காகவும் ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கார்த்திகா - புளியந்தோப்பு**

எனக்கு 2016 ல் திருமணம் நடந்தது. நான் கருவுற்று மூன்று முறை கருச்சிதைவு ஆகிவிட்டது. குழந்தைக்காக நிறைய பணம் செலவு செய்தும் எனக்கு கரு நிற்கவில்லை. எனக்கு குழந்தை ஆசை அதிகம். என் ஆசை நிராசை ஆகியது. அதனால் நான் மன





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு ஏழைச் சிறுவன் திருப்பலிக்குமுன் பங்குத்தந்தையை பார்க்க சென்றான். அவரைப் பார்த்து, “சாமி, நான் பெரும் ஏழை, என்னிடம் என் உயிரைத் தவிர வேறு எந்த சொத்தும் இல்லை, நான் நல்ல வசதியுடன் வாழ வழி சொல்லுங்கள்” என்று கேட்டான். அதற்கு பங்குத் தந்தை அவனிடம், “நான் 5000 ரூபாய் தருகிறேன். உன் கைகளை என்னிடம் வெட்டிக்கொடு” என்று கேட்டார். அதற்கு 5000 ரூபாய்க்காக என் கைகளை இழக்க முடியாது என்று கூறினான். “சரி, நான் உனக்கு 15000ரூபாய் தருகிறேன், உன் கண்களையாவது கொடு” என்று கேட்டார். அதற்கும் அவன் முடியாது என்றான். உனக்கு இருபது லட்சம் வேண்டுமென்றாலும் தருகிறேன், உன் உயிரைக் கொடு என்றார். அதற்கு அந்த ஏழைச் சிறுவன், “நீங்கள் சொல்வதை செய்யமுடியாது என்றான். பங்குத்தந்தை அவனிடம், “உன்னிடம் உன் உயிரைத் தவிர வேறு எந்த சொத்தும் இல்லை, மேலும் எவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்தாலும் கொடுக்க விரும்பாத விலைமதிப்பற்ற உயிரைக் கொண்டுள்ள நீ எவ்வாறு ஏழையாக இருக்க முடியும். கடவுள் உன்னை விலைமதிப்பற்ற ஒருவனாக படைத்துள்ளார். ஆகவே இதை உணர்ந்து உன் வாழ்க்கையை பயன்படுத்து என்று கூறிவிட்டு ஆலயத்திற்குள் சென்றார். திருப்பலி ஆரம்பமானது, காணிக்கை நேரத்தில் ஒவ்வொருவரும் தாங்கள் கொண்டுவந்திருந்த பொருட்களை கூடையில் போட்டுக்கொண்டிருந்தனர். காணிக்கை கூடை ஏழை சிறுவனின் முன் வந்தபோது, அவனிடத்தில் ஒன்றுமில்லை. விலைமதிப்பற்ற பொருளை கடவுளுக்கு கொடுக்க வேண்டும், நான்தான் அந்த விலைமதிப்பற்ற பொருள் என்று கூறி அந்த கூடையில் ஏறி அமா்ந்துக் கொண்டான்.”முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்” (2 கொரி 9:7)

புனித கன்னிமரியா காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழாவை நவம்பர் 21 ம் தேதி நாம் பாரம்பரியமாக கொண்டாடுகிறோம். இதனை “அன்னைமரியா ஆலயத்தில் நுழையும் விழா” என்று கிரேக்கர்கள் கொண்டாடினர். மரியாவின் பெற்றோர் தங்களுக்கு குழந்தைவரம் கிடைத்ததற்கு நன்றியாக மரியாவுக்கு மூன்று வயது நடைபெறும்போது அவரை எருசலேம் ஆலயத்தில் ஆண்டவருக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுத்தனர். இந்நிகழ்வை புனித ஜெர்மாஸ், “மரியா, உலகிற்கும், அதுதரும் இன்பங்களுக்கும் பிரியாவிடை கொடுத்து படைத்தவருக்கு தம்மையே முழுமையாக அர்ப்பணமாக்கினார்” என்று குறிப்பிடுகிறார். அன்னை மரியாள் இறைவனுக்காக தன்னையே முழுமையாக கொடுத்தார். நாம் கொடுக்கும் காணிக்கையில் நமது அர்ப்பணம் முழுமையாக வெளிப்படுகிறதா? ஏழைக் கைம்பெண் தன்னிடம் இருந்த அனைத்தையும் காணிக்கையாக செலுத்தினார். நாம் கொடுத்து பெறுகின்ற நிலையில் இறைவன் இல்லை. நாம் கொடுப்பதால் இறைவனுக்கு எந்த பெருமையும் இல்லை. நாம் கொடுப்பதை இறைவன் ஏற்பதால் நமக்குத்தான் பெருமை. மரியாவின் வழியில் நம்மையே முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிப்போம்.

# புனித கன்னி மரியாவை அர்ப்பணித்தல்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 21 ஆம் நாள் நமது அன்னை மரியாவை கோவிலில் காணிக்கையாக அர்ப்பணித்த நிகழ்வு சிறப்பிக்கப்படுகிறது. மூன்று வயதில் எருசலேம் ஆலயத்தில் அவரது பெற்றோர் இறைவனுக்குப் பணிசெய்ய, கோவிலில் அன்றாடப் பணிகளைச் செய்ய, வேத நூல்களில் தேர்ச்சிபெற குருக்களிடம் ஒப்படைத்ததாக திருஅவையில் ஒரு மரபு நிலவி வருகிறது. கிறிஸ்தவ மக்களும் இதை நம்பி காணிக்கை மாதா என அவரைப் போற்றி வருகின்றனர். நமது அன்னை மரியா இறைவனுக்கு அர்ப்பணமானவர் என்பதை அவருடைய வாழ்விலிருந்து அறிகிறோம். எனவே இறைவன் அவரை அருளால் நிரப்பினார். தனது மகனுக்குத் தாயாகும் பேற்றினை அளித்தார். அந்த மகன் தந்தைக்குரிய அன்பு மகனாக வாழ மரியா அன்னை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்தார். மோயீசனின் சட்டத்தை மதித்து குழந்தை இயேசுவை அவர் பிறந்த நாற்பதாம் நாள் காணிக்கையாக்கினார். கல்வாரி மலையில் மனுக்குலத்தின் மீட்புக்காக அவரது உயிரையே அர்ப்பணிக்கும்போது சிலுவையினடியில் நம்பிக்கையுடன், உறுதியுடன் இருந்தார். இன்று தன்னையே காணிக்கையாக்கும் அன்னையின் அர்ப்பண மனநிலையை இக்கட்டுரையில் காண்போம்.

**மக்களின் மரபு**

மரியாவை கோவிலில் அர்ப்பணித்த நிகழ்வு நற்செய்தியில் இடம்பெறவில்லை. ஆனால் யாக்கோபு நற்செய்தியில் இந்நிகழ்வு இடம் பெற்றுள்ளது. மரியாவின் பெற்றோருக்கு நீண்ட காலமாக குழந்தைப் பேறு இல்லாததால் மிகவும் கவலையடைந்தனர். இறைவனிடம் மன்றாடினர். ஜெப தபத்தில் நிலைத்து இருந்தனர். ஒருநாள் அவர்களுக்கு இறைவேண்டலின் பொழுது ஒரு செய்தி கிடைத்தது. அன்னா தனது முதிர்ந்த வயதில் ஒரு பெண்மகவைப் பெற்றெடுப்பார். இக்குழந்தை இறைவனுக்குரியது. அக்குழந்தையை எருசலேம் தேவாலயத்தில் ஆண்டருக்குப் பணிசெய்ய அர்ப்பணிக்க வேண்டும் என்பது அந்த செய்தி. தங்களுக்கு கூறப்பட்டவாறு குழந்தை பிறந்தது. மூன்று வயதில் அக்குழந்தையை கோவிலில் அர்ப்பணித்தார்கள். அந்த விழா நவம்பர் மாதம் 21 ஆம் நாள் சிறப்பிக்கப்படுகிறது.

**அர்ப்பணித்தல் விழா**

18,19 ஆம் நூற்றாண்டுகளில் புனித வாழ்வு வாழ்ந்த கன்னியும், காட்சிகள் காணும் பேறும், ஐந்து காய வரங்களும் பெற்றிருந்த ஜெர்மனி நாட்டைச் சார்ந்த ஆனி கேத்தரின் எமரிக் என்ற புனிதை ஒரு காட்சியில் தாம் கண்ட நிகழ்வை பின்வருமாறு விவரிக்கிறார். குழந்தை மரியாவை காணிக்கையாக அர்ப்பணித்த நாளன்று ஒரு பவனி எருசலேம் ஆலயத்தை நோக்கிப் பயணித்தது. முதலில் சுவக்கின், சக்கரியாவோடு செல்ல மரியா, மரியாகுளோப்பஸ், சிறிய தோழியர் மூவருமாக சென்றனர். குழந்தை மரியா மேகத்தின் நீல நிறத்தில் மேலாடை அணிந்தவராய் கரங்களிலும், கழுத்திலும் பூமுடியைச் சூடியவராய் அழைத்து வரப்பட்டார். கையில் மெழுகுதிரியை ஏந்தியிருந்தார். தோழியரும் வெள்ளை நிறத்தில் மேலாடை அணிந்து சென்றனர். கோவிலை அடைந்ததும் அங்குள்ள பணியாட்கள் தங்கக் கதவு என்று அழைக்கப்படும் கதவைத்திறக்கின்றனர். குழந்தை மரியா மிக வேகமாக படிக்கட்டுகளில் ஏறி 15- வது





இறைவன் தந்த கொடை என்றும்
சாவு நமது வாழ்வை
நம்மிலிருந்து பிரித்து விடாது என்றும்
நாம் கற்கும் பாடமே
கல்லறைத் திருநாள்

அன்பு என்பது....
காலத்தால் கட்டுப்படுத்த இயலாத ஆற்றல்
அன்புக்காக வாழும் அனைவருக்கும்
அழிவு என்பதே இல்லை
இறந்தோரின் இலட்சியங்கள்
அவர்கள் விட்டுச்சென்ற பண்புகள்
அவர்கள் காட்டிய வாழ்க்கைப் பாதைகள்
நம்மிடமே வாழ்கின்றன
இறந்த தந்தைக்காக அழும் ஒருவர்
'தந்தையின் இதய உறவுகள்
தன்னுள்ளேயே வாழ்கின்றன'
என்பதை உணர்ந்தால்
தந்தையரது உறவின் ஆற்றல்
அவருக்கு இதய அமைதியும் ஆற்றலும் தரும்
இதைக் கற்பிக்கும் பள்ளியே கல்லறைகள்

தீபாவளி எனில்-தீபங்களின் வரிசை என்பர்
உருகும் தீபங்களின் வரிசையிலே
அவற்றின் ஒளியிலே
இறந்தும் நம்முடன் வாழும் -நம்
இதயம் உருக்கும் உறவுகள்
நமது செபத்தாலும் தவத்தாலும்
மகிழ்ந்திருப்பதை உணரும் நன்னாளே
கல்லறையின் தீபாவளித் திருநாள்!

**சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்**

# கல்லறைத் தீபாவளி

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

நவம்பர் இரண்டு.....
நினைவுகளின் எழுச்சியில்
நித்தியம் காணுகின்ற
நெஞ்சின் நெகிழ்வு நாள்
இறந்தும் வாழ்வோரின்
நிரந்தரம் உணர்த்துகின்ற
நினைவலைகள் மோதும் நாள்
கல்லறைத் தீபாவளியாய்
இறந்தோரின் வண்ணக் கோலங்கள்
விண்மீன்களாய் ஒளிவிடுவதைச் சொல்லும் நாள்
உயிர்ப்பின் நம்பிக்கையை
உறுதிப்படுத்தும் கல்லறையை
உறவுகளோடு சந்திக்கும் நாள்
உத்தரிக்கும் ஸ்தலம்
ஆன்மாக்களை இறைவன்
நிரந்தர அழிவுக்கு விடமாட்டார்
நித்திய மகிமையில் அவர்கள் சங்கமிக்க
இறைவன் தரும் வாய்ப்பே
உத்தரிக்கும் ஸ்தலம்
“மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக் கண்டு கலுழுமே கண்”
மிகுந்த நோயால் வருந்தும்
உடலின் பிற உறுப்பைக் கண்டு
கண்கள் நீர்வடிக்கின்றன- அதுபோல
ஆன்மாக்களின் துன்பம் கண்டு வருந்தி
நாம் செய்யும் செபங்களும் தர்மங்களும்
அவர்களைத் தூய்மை செய்து துன்பம் நீக்கி
பேரின்ப உலகினுக்கு வழியனுப்ப
அவர்களோடு நாம் கொள்ளும் தோழமையைக்
காட்டும் கரிசனமே கல்லறைத் திருநாள்
ஒவ்வொரு இறப்பும் - நமது
வாழ்வினை ஊடுருவும் வாழ்க்கைப் பாடங்கள்
நாம் வாழுகின்ற ஒவ்வொரு நொடிப்பொழுதும்





படியை அடைகிறார். அப்படியில் அவரை சுவக்கீன், சக்கரியா மற்றும் ஏழு குருக்கள் வரவேற்கின்றனர். குழந்தையிடம் கேள்விகள் கேட்கப்படுகின்றன. பதில் அளித்தபின் ஊதா நிறத்தில் ஆடை அணிவிக்கப்பட்டு தலையில் ஒரு பூமுடி சூட்டப்படுகிறது. சுவக்கீன் மற்றும் குருக்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பலியை செலுத்துகின்றனர். பெண்கள் அனைவரும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து பலி செலுத்துவதைப் பார்க்கின்றனர். கோவிலில் உள்ள சிறுவர்கள் புல்லாங்குழல், யாழ் கொண்டு இசைமீட்டுகின்றனர். பலியை நிறைவேற்றியபின் லேவியர்கள் ஏட்டுச்சுருளை விரிக்க, அன்னா மரியாவை அதன் முன் நிறுத்துகிறார். தோழியர் பின்னால் நிற்கின்றனர். பெற்றோர் மரியாவின் தலைமீது கைவைத்து ஆசீர் அளித்தனர். தோழியர் 44 –வது திருப்பாடலை பாடுகின்றனர். பிறகு இரண்டு குருக்கள் மரியாவை அழைத்துக்கொண்டு பல படிகளைக் கடந்து சற்று உயரமான மாடம் போன்ற இடத்தில் நிறுத்துகின்றனர். தலைமைக் குரு தூபப்புகையால் அவ்விடத்தைப் புனிதப்படுத்துகிறார். இச்சமயத்தில் ஆண்டவரின் மாட்சி கோவிலை நிரப்பியதாக இப்புனிதை விவரிக்கிறார். மேலும் மரியின் மார்பு முன்பாக இறுதி இரவு உணவின் போது பயன்படுத்தப்பட்ட இரசப்பாத்திரம் ஒன்றும் அவரது வாயின் அருகில் சிலுவை அடையாளம் வரையப்பட்ட ரொட்டியும் காணப்பட்டதாகவும் கூறுகிறார்.

இறுதியாக குழந்தையின் பூ முடி மற்றும் மெழுகுதிரிகள் அவரிடமிருந்து எடுக்கப்படுகின்றன. தவத்தின் அடையாளமான மரக்கலர் முக்காடு ஒன்று தலையில் போடப்பட்டு மற்றொரு அறைக்கு அழைக்கப்படும்போது கோவிலின் கன்னியர்களில் ஆறுபேர் மரியின் மீது மலர்களைத் தூவினர். மரியின் பின்னால் அவரின் ஆசிரியர் நகோமி, இறைவாக்கினர் அன்னா நின்று கொண்டிருந்தனர். குருவானவர் இவர்களிடம் சிறுமியை ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து அகன்று போகிறார். மரியா அனைவருக்கும் பிரியாவிடை கொடுக்க சுவக்கீன் உணர்ச்சிகளால் ஆட்கொள்ளப்படுகின்றார். அவர் குழந்தையை தூக்கி மார்போடு அணைத்துக் கொள்கிறார். கண்ணீர் மல்க “இறைவன் திருமுன் என் ஆன்மாவை நினைத்துக்கொள்” என்று மூன்று முறை சொல்கிறார். பின்னர் அனைவரும் உணவு உண்ணச் செல்கின்றனர். இறைவாக்கினர் அன்னா அங்கிருந்த பெண்களிடம் சென்று புதிய உடன்படிக்கையின் பேழையும், வாக்குறுதியின் பாத்திரமும் திருக்கோவிலில் நுழைந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் உரைக்கின்றார். மரியின் பெற்றோரும், உறவினரும் அன்றே பெத்துரோன் என்ற இடத்திற்குச் செல்கின்றனர். இத்தகைய அற்புதமான காட்சியை புனிதை எமரிக் விவரிப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. மரியா கருவில் உருவாகும்போதே அமல உற்பவியாக உதிக்க இறைவன் திருவுளம் கொண்டார். அதே இறைவன் இந்த சிறுமி அவரது மண்ணக உறைவிடமான எருசலேம் ஆலயத்தில் நுழையும்போது கோவிலையும், அன்பு மகனையும் தம் மாட்சியால் நிரப்புவது ஒன்றும் ஆச்சரியமல்ல. இறைவன் மரியாவை அவர் உறையும் ஆலயமாக உருவாக்கி வரும்விதம், அவரை அருளால் நிரப்பி வரும் விதம் நம்மை வியக்க வைக்கின்றது. நம்மையும் அவர் இறையருளால் நிரப்புகின்றார். அதைக் கண்டு கொள்வோம். அந்த அருளோடு ஒத்துழைப்போம்.

**ஆலயத்தில் சிறுமி மரியா**

மெசியாவின் தாயாக இருக்கவேண்டிய மரியா, ஒரு சாதாரண வீட்டுச்சூழலில் வாழந்தால் முழுமையான வளர்ச்சி பெற இயலாது என்பதால் தூய ஆவி அவரின் பெற்றோர்கள் வழியாக அவரை ஆலயதிதல் வளர விடுகிறார். மூன்று வயது ஆவதற்கு முன்பே மரியின் தாய் அவரை மிகக் கவனமாக வீட்டிலே தனியாக அவருக்கு என்று இடம் ஒதுக்கி மிக கவனமாக அவரைக் கவனித்ததாகவும் அறிய வருகிறோம். இயல்பிலேயே இறைபக்தி, இறை ஞானம் நிறைந்த அவரை அதில் இன்னும் வளர்ச்சி பெறுவதற்கு ஆலயமே அவருக்குத் தகுந்த கல்விக்கூடம் ஆனது. குருக்களோடு உரையாடல், மறைவல்லுநரிடம் கல்வி கற்றல், முதிய பெண்களுக்கு உதவி செய்தல் போன்றவை அவரது முழுமையான வளர்ச்சிக்கு உதவின. சிறப்பாக நகோமி, இறைவாக்கினர்

அன்னாவிடமிருந்து தேவநூல்களைக் கற்றதாக மரபு கூறுகிறது. இவ்வாறு 12 வயது வரை கோவில் திருப்பலியில் மரியா ஈடுபட்டிருந்ததாக மக்கள் நம்புகின்றனர்.

புனிதை எமரிக் கூறுகிறாா்: சிறுமி மரியா மிகவும் ஆா்வத்தோடு, வேகமாக வேத நூலைக் கற்று வந்தாா். சிலசமயங்களில் மற்ற இளம்பெண்களோடும், சிலசமயங்களில் தனியாகவும் தனது அறையில் வேதநூல்களைப் படித்து வந்தாா். நெய்தல் வேலையை சிறப்பாக கற்று வந்தாா். கோவிலுக்கு பயன்படுத்தப்படும் துணிகளையும் பாத்திரங்களையும் தூய்மையாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாா். தனது உடலை வருத்தும் தியாக செயல்பாடுகளில் அவா் ஈடுபடவில்லை. கோவிலில் வசித்து வந்த மற்றவா்களைப் போலவும் எதை உண்ண வேண்டுமென்று உறுதிப்பாடு எடுத்ததையுமே உண்டு வந்தாா். மறைவாக யூதா்களின் மீட்புக்காக அதிகம் இறை வேண்டல் செய்தாா். கோவிலில் நடைபெறும் வழிபாடுகளில் தவறாது கலந்து கொண்டாா். நடு இரவில் ஆழந்த அமைதியில் தூக்கத்தினின்று விழித்தெழுந்து ஜெபித்தாா். ஜெபத்தின்போது அடிக்கடி கண்ணீா் வடியும். அவ்வேளைகளில் இறைப்பேரொளி அவரைச் சூழ்ந்து காணப்பட்டது. எப்போதும் நீல நிற ஆடையில் காணப்பட்டாா். ஜெபிக்கும்போதும் குருக்களிடம் பேசும்போதும் முக்காடு அணிந்து கொள்வாா். கோவிலைச் சுற்றியுள்ள மூன்று பக்கங்களிலும் சக்காிஸ்து போன்று அறைகள் காணப்பட்டன. அங்குள்ள பொருட்களை அவ்வப்போது கழிப்பது, சுத்தம் செய்வது புதிய பொருட்களை வைப்பது போன்ற செயல்களிலும் ஈடுபட்டிருந்தாா்.

இவைகளைப் பாா்க்கும்போது மரியாவின் சுறுசுறுப்பான குழந்தைப்பருவம் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இத்தகைய அவரின் மகிழ்வான அழகிய வாழ்வைத் தியானிக்கும்போது புனிதா் ஐரேனியுஸ் கூறிய கூற்று நினைவுக்கு வருகிறது. எந்த மனிதன் எப்போதும் முழுமையான மகிழ்வுடன் இருக்கின்றானோ அவன் கடவுளுக்கு மாட்சியைக் கொடுக்கிறான். மரியாவின் வாழ்வு இறைவனுக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது. இத்தகைய குழந்தைப் பருவத்தை அவா் மகன் இயேசுவுக்கு அளித்து அவா் ஞானத்திலும், அறிவிலும் வளர பெரிதும் உதவினாா்.

**காணிக்கை மாதா தரும் செய்தி**

அன்னையைப் போன்று ஒவ்வொரு கிறிஸ்தவரும் அா்ப்பணிக்கப்பட்டவரே. திருமுழுக்கில் ஒவ்வொரு குழந்தையும் கோவிலுக்கு மரியாவைப் போன்று, இயேசுவைப் போன்று எடுத்து வரப்படுகிறது. திருமுழுக்கின்போது இறைவனின் மகனாகும், மகளாகும் உரிமைப்பேறு பெறுகிறது. திரு அவையில் உறுப்பினராக இணைக்கப்படுகின்றது. இயேசுவின் திருமுழுக்கின்போது ஆவியானவா் இறங்கி வந்ததுபோன்று நம்மீதும் இறங்கி வருகின்றாா். இதோ என் அன்பாா்ந்த மகள், மகன் என்று நம்மையும் பாா்த்து அன்பொழுக அழைக்கின்றாா் விண்ணக தந்தை. ஜென்மப் பாவத்திலிருந்து நாம் கழுவப்படுகின்றோம். புதுமனிதா்களாக தூய ஆவியானவரில் புதிய வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றோம். இறைவனின் அன்புக்கட்டளையை, இயேசுவின் மலைப்பொழிவை நிறைவாக வாழும்போது நமது அா்ப்பணம் புனித நிலையை நோக்கிப் பயணிக்கின்றது. இறைவனின் அருள் தொடா்ந்து நம்மீது பொழியப் படுகின்றது. இதனால் பாவம், தீமை போன்றவைகள் நம்மை அணுகாத வண்ணம் வாழ அழைக்கப்படுகிறோம். ஆனால் இத்தகைய வாழ்வு வாழ்வது எளிதல்ல. ஆனால் இறைவன் தூயவராய் இருப்பதுபோல நாமும் தூயவா்களாய் வாழ அவா் விரும்புகிறாா். தூய்மையான அா்ப்பண உணா்வுடன் வாழும் வாழ்வு இறைவனையும் அவா் சாா்ந்த காாியங்களையும் மட்டும் உள்ளடக்கியது அல்ல. தூய்மையான உள்ளத்தைப் பற்றிப் பேசும்போது திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவாா்; மற்றவா்களுக்குத் தீங்கு செய்யாத உள்ளமே தூய்மையான உள்ளம். தூய்மையான உள்ளம் மற்றவா்களுக்கு நன்மை செய்ய விளைகின்றது. ஆனால் கிறிஸ்தவா்களுக்கு தூய்மை, அா்ப்பணம், கன்னிமை அனைத்தும் உடல் சாா்ந்த ஒன்றாக மட்டுமே சிலவேளைகளில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் நமது பாா்வை பரந்துபட்டு

தொடா்ச்சி 33 ஆம் பக்கம்





"Patience is simply not the ability to wait but it's how we behave while we are waiting".

அதாவது பொறுமை என்பது வெறுமனே காத்திருப்பது மட்டுமல்ல மாறாக, காத்திருக்கும்போது நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பதாகும்.

பெரிய கடைகளுக்குச் சென்று நமக்குத் தேவையான பொருட்களை பல மணிநேரம் செலவழித்து பாா்த்து பாா்த்து வாங்கும் நாம் அதற்கான பணத்தைக் கட்டுவதற்காக வாிசையில் நிற்கும்போது எத்தனை முறை 'உச்' கொட்டிக் கொண்டும் கட்டண வசூலிப்பாளரை குறை கூறிக்கொண்டும், வாிசையில் முன் நிற்பவரைத் திட்டிக்கொண்டும் இருக்கிறோம். காத்திருக்கும்போது நம் மனநிலை எப்படி இருக்கிறது?

பொறுமைக்கு இலக்கணமாக நம் தாய் மரியாவும், திருக்குடும்பத்தின் தலைவா் புனித யோசேப்பும் இருக்கிறாா்கள். தங்கள் வாழ்வில் எவ்வளவோ துன்பங்களும், வேதனைகளும் வந்தபோதும் மரியாவும், யோசேப்பும் பொறுமை காத்தாா்கள். தன் மகனை ஏரோது கொல்லத் துடிக்கிறான் என்று கேள்விப்பட்ட யோசேப்பும் மரியாவும் குழந்தை இயேசுவை தூக்கிக் கொண்டு எகிப்திற்கு தப்பிச் சென்று "குழந்தையைக் கொல்லத்துடித்தவா்கள் இறந்துபோனாா்கள். எனவே இஸ்ரயேல் நாட்டுக்கு திரும்பிச் செல்லுங்கள்" (மத் 2:20) என கனவில் தூதா் செய்தி சொல்லும் வரை பொறுமையோடு காத்திருந்தாா்கள். யோசேப்பு இறந்த பின்பும் மரியா மிகவும் பொறுமைசாலியாக வாழ்ந்தாா். தன்மகனைக் குறித்து இகழ்ந்து பேசியவா்கள் மீது கோபம் கொண்டு மரியா வசைபாடவில்லை. இயேசுவை காட்டிக்கொடுத்தவன் மீதும், மறுதலித்தவன் மீதும், வீண்பலி சுமத்தியவா்கள் மீதும், கொலைத் தண்டனை கொடுத்தவன் மீதும், அடித்து இழுத்துச் சென்று கொலை செய்தவா்கள் மீதும் கோபம்கொள்ளாமல் மரியா பொறுமை காத்தாா். தம் திருமகன் கண்டிப்பாக இறப்பின் மீது வெற்றி கொண்டு உயிா்த்தெழுவாா் என்ற நம்பிக்கையோடு பொறுமை காத்தாா்.

"பொறுத்தாா் பூமியாள்வாா்" என்று சொல்வாா்கள். பொறுமையுள்ளவா்கள் எப்பொழுதும் மக்கள் இதயங்களில் இடம்பிடிப்பாா்கள். அன்னை மரியா இன்று அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்படுவதற்கும், வணங்கப்படுவதற்கும், விண்ணக மண்ணக அரசியாகவும், இறைவனின் தாயாகவும் கொண்டாடப்படுவதற்கும் காரணம் மரியாளிடமிருந்த பொறுமை. மரியா, யோசேப்பு, குழந்தை இயேசு வாழ்ந்த குடும்பத்திற்கு அழகு சோ்த்தது பொறுமை. திருப்பாடல் 103:8 "ஆண்டவா் நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவா்" என்று கூறுகிறது. நம் கடவுளைப்போல நீடிய பொறுமையோடும் பேரன்போடும் மரியா வாழ்ந்தாா். நம் குடும்பத்திலும் நாம் பொறுமையோடு எல்லவாவற்றையும் எதிா்கொள்ள வேண்டும்; ஒருவா் மற்றவரைத் தாங்கிக் கொள்ளவேண்டும்; எல்லாருக்கும் பேரன்பு காட்டவேண்டும்.

மரியாவின் பொறுமை நம் மனதிலும் தங்கட்டும் நம் குடும்பங்களும் பாா்போற்ற சிறக்கட்டும்.



# குடும்ப வாழ்வில் மரியா 9

**அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச**
**சோழிங்கநல்லூர், சென்னை**

மரியா வாழ்ந்த திருக்குடும்பத்தில் கனிவு என்ற குணம் எப்படி மேலோங்கியருந்தது என்று கடந்த இதழில் சிந்தித்த நாம் அதே குடும்பத்தில் பொறுமை என்ற பண்பு எவ்வாறு அழகு சேர்த்தது என்று இவ்விதழில் சிந்திப்போம்.

**மரியா குடும்பத்தில் பொறுமை**

இன்று நாம் வாழும் காலம் அதி அவசரமான காலம். போட்டி நிறைந்த காலம். மற்றவரைவிட ஒருபடி மேலே செல்ல வேண்டும் என ஓடிக்கொண்டே இருக்கிறோம். நிதானம், பொறுமை என்பதற்கெல்லாம் இடமில்லாமல் போய்விட்டது. குடும்பமாய் அமர்ந்து பேசவோ, ஜெபிக்கவோ, உணவருந்தவோ நேரமில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். குழந்தைகளுக்காக நேரம் செலவழிக்கவும், அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், இறை நம்பிக்கையையும் கற்றுக்கொடுக்கவும் நேரமில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறோம். கணவன் மனைவி உரையாடவும், உறவாடவும், பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கவும் முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறோம். மற்றவருக்காக காத்திருப்பதற்கோ, மற்றவர்களுடைய குறைகளைப் பொறுத்துக்கொள்வதற்கோ முடிவதில்லை. வரிசையில் நிற்பதற்கும், சாலை விதிகளைப் பின்பற்றி வாகனம் ஓட்டுவதற்கும் யாருக்கும் பொறுமை இல்லை. ஒருவரை தொலைபேசியில் அழைத்து அதற்கு அவர் பதிலளிக்கவில்லை என்றால் அவர் மீண்டும் அழைக்கும் வரை காத்திருக்க பொறுமையில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மரியா குடும்பத்தில் பொறுமை இருந்ததையும் அப்பபொறுமையினால் மரியா சாதித்ததையும் குறித்து நாம் சிந்திப்பது மிகவும் அவசியமாகும்.

பொறுமை என்பது நம்மை ஒருவர் எரிச்சலூட்டும்போதும், நமக்கு துன்பம் தரும்போதும் உணர்ச்சி வயப்படாமலும், கோபம் கொள்ளாமலும் இருக்கும் மனநிலை ஆகும். மற்றவர் நம்மை இகழும்போதும், ஒரு காரியத்திற்காக அல்லது ஒருவருக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் போதும், நினைத்த காரியம் நிறைவேற தாமதம் ஏற்படும்போதும், பல்வேறு துன்பங்களும், சவால்களும், அவமானங்களும், அசாதாரண சூழ்நிலைகளும் நம் வாழ்வில் வரும்போதும் அமைதியாக இருக்கும் குணம்தான் பொறுமை ஆகும்.

இதைவிட ஒரு அருமையான விளக்கத்தை அமெரிக்க எழுத்தாளர் ஜாய்ஸ் மேயர் கூறுகிறார்,





# அன்னையின் 47 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., மாமல்லபுரம்.



## ஆணைமாவலி, மேலமங்கலம் ஒக்கூர்

வியாகுல அன்னையின் ஆலயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த நூற்றாண்டுகளில் எழுப்பப்பட்டுள்ளன. இந்த ஆலயங்கள் வியாகுல அன்னையின் மீது மக்கள் கொண்டிருந்த பக்தியின் வெளிப்பாடாகவும், மக்களின் வாழ்வில் இணைந்து நடந்து சென்ற அன்னையின் பிரசன்னத்தின் அடையாளமாகவும் கொள்ளலாம்.

இந்தியாவிற்கு மறையை போதிக்க வந்த இயேசு சபை மறைப்பணியாளர்களின் பணியானது மறவ நாட்டில் செழித்து வளர்ந்தது. இயேசுவிற்காய் தன்னுயிரை ஈந்த புனித ஜான் பிரிட்டோ (அருளானந்தர்) வேதசாட்சியாய் மரித்ததும் இப்பகுதியில்தான். எனவே, அப்பகுதி மக்கள் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ள இத்தகைய மறைப்பணியாளர்களின் வாழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்தது. இம்மறைப்பணியாளர்கள் மீட்பராம் இயேசுவை பற்றி போதித்ததோடு மட்டுமல்லாமல், மீட்பின் திட்டத்தில் அன்னை மரியாவின் பங்கையும், அதிலும் குறிப்பாக வியாகுல அன்னையின் உடனிருப்பையும் மக்களுக்கு எடுத்துரைத்தனர். எனவே, மக்கள் உள்ளங்களில் வியாகுல அன்னையின் மீதான பக்தி ஆழமாகப் பதிந்திருந்தது.

மறவ நாட்டில் பணிபுரிந்த பணியாளர்கள் பல இடங்களில் வியாகுல அன்னைக்கு கெபிகளையும், ஆலயத்திற்குள் சிறப்பு பீடங்களையும் அமைத்தனர். இவ்விடங்களில் இயேசுவை மடியில் தாங்கியிருக்கும் வியாகுல அன்னையின் சுரூபங்களை நிறுவினர். பல நேரங்களில் இத்தகைய சுரூபங்கள் கடல் மார்க்கமாகவோ அல்லது ஆற்று வழிதடங்கள் வழியாகவோ வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, பிரேசில் நாட்டில் உள்ள அப்பரிசீதா (காண்க திருத்தலம் நோக்கி பாகம் 7), தமிழகத்தில் உள்ள தும்முச்சினாம்பட்டியில் உள்ள வியாகுல அன்னை சுரூபமானது மூக்கையூரில் மீனவர்களால் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டதாகும் (காண்க திருத்தலம் நோக்கி பாகம் 25).

கி.பி. 1836 ஆம் ஆண்டு திருத்தந்தை 14ஆம் கிரகோரி அவர்களால் மதுரை மறைப்பணித்தளம் அப்போஸ்தலிக்க பிரெபெக்சராக (prefecture) ஏற்படுத்தப்பட்டது. பின் கி.பி 1846ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க விகாரியேட்டாக உயர்த்தப்பட்டது. இம்மறைத்தளத்தில் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டோரின் எண்ணிக்கை நாளும் மேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்து கொண்டேயிருந்தது. ஆண்டவரின் அருளை அனைவருக்கும் வழங்க தன்னிகரில்லா ஆர்வத்தோடு பணிபுரிந்தனர் அருட்பணியாளர்கள். அதன்பின், கி.பி. 1886ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி மதுரை மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு அதன் தலைமையிடமாக திருச்சிராப்பள்ளி அறிவிக்கப்பட்டது. கி.பி. 1938ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் நாள், மதுரை மறைமாவட்டமானது திருச்சியிலிருந்து பிரிக்கப்பட்டு, புது மறைமாவட்டமாக ஏற்படுத்தப்பட்டது. இங்ஙனம், மறவர் மண்ணானது திருச்சபையில் உயிரூட்டமுள்ள பகுதியாக உருவெடுத்தது.

இப்பகுதியில், சிவகங்கைக்கு அருகில் உள்ள ஒக்கூர் பங்கின் பகுதியாக ஆணைமாவலி என்கிற சிறு கிராமம் விளங்கியது. இக்கிராமத்தில் கிறிஸ்தவத்தின் வேர்கள் ஆழமாக காணக்கிடக்கின்றது. இவ்வூரில் வசித்த ஒருவருக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. குழந்தை பாக்கியம் வேண்டி தன் குடும்பத்தாருடன் ஓரியூருக்குத் திருப்பயணம் மேற்கொண்டார். இச்சகோதரர் கிறிஸ்தவராக இல்லாமல் இருந்தும் நம்பிக்கையோடு ஆண்டவரை நாடி, புனித ஜான்பிரிட்டோவின் திருத்தலத்திற்கு வந்தார். அத்திருப்பயணத்தின் போது ஆண்டவரின் திருப்பிரசன்னத்தில், தங்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்தால் தாங்கள் அனைவரும் கிறிஸ்துவை விசுவசித்து ஏற்கொண்டு, கிறிஸ்தவர்களாக மாறுவதாக வாக்களித்தனர். அவர்களின் விண்ணப்பத்தை ஏற்ற ஆண்டவர் குழந்தை பாக்கியத்தை அளித்தார். தாங்கள் பெற்ற குழந்தைக்காக மனம் நிறைந்த நன்றியை செலுத்திய அவர்கள், தாங்கள் வாக்களித்தவாறே கிறிஸ்தவர்களாக மாறினர். அக்குழந்தையின் தந்தை சவரிமுத்து என்ற கிறிஸ்தவ பெயரை ஏற்றுக்கொண்டார்.

அவ்வூரில் செல்வந்தர்களாக அவர்கள் இருந்தமையால் தங்களுக்கு குழந்தைப் பாக்கியம் தந்த ஆண்டவருக்கு ஒரு சிற்றாலயம் அமைக்க விரும்பினர். ஆணைமாவலிக்கு அருகில்







குழந்தைகள் போலவே மலர்ந்தார் அதில் தம் தாயின் தனிப்பெரும் தாக்கத்திற்கு ஆளானார். அதாவது, மற்ற மனித குழந்தைகள் போல அவரும் வாழ்வின் ஆரம்பமும் அடிப்படையுமான, முதலும் முக்கியமுமான காரியங்களை தம் தாயிடமிருந்து கற்றுத் தெளிந்தார். குறிப்பாக, அவரிடம் சிறப்புற்று விளங்கிய அன்புணர்வு, அறநோக்கு, இறைஉணர்வு, எல்லோர் மேலும் கனிவு ஏழையின் பால் தனிப்பட்ட பரிவு, விடுதலைத் துடிப்பு, அதற்குரிய துணிவு, தியாகம் என்னும் பண்புகளை அவரிடம் வளர்த்துவிட்டதில் அவரின் தாய் மரியாவுக்கு தனிப் பெரும் பங்கு இருந்தது என்று நாம் உறுதியாக நம்பலாம்.

இது வெறும் ஊகம் அல்ல. நற்செய்திகளில் இதற்குரிய சான்றுகள் உள்ளன. மரியாவின் நம்பிக்கைக்கும் இயேசுவின் நம்பிக்கைக்கும் இடையே அடிப்படையான தொடர்பும் தொடர்ச்சியும் இருப்பதை லூக்கா நற்செய்தியில் நாம் தெரிந்து கொள்ளலாம். மரியா யூத நம்பிக்கையில் வளர்ந்தவர். யாவே கடவுளை நம்பியிருந்தார். அந்த யாவே எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேலரை விடுவித்தார். இறைவாக்கினர் காட்டியபடி அவர் ஏழைகளைச் சார்ந்து நின்று அவர்களுக்கு நீதி செய்பவர் தாழ்நிலை நின்ற அடிமையை கண்ணோக்கும், நெஞ்சிலே செருக்குற்றவர்களை சிதறடிக்கும், தாழ்ந்தோரை உயர்த்தும், பசித்தவர்களை நலன்களால் நிரப்பும் விடுதலைக் கடவுள் மீது மரியா நம்பிக்கைக் கொண்டிருந்தார். இத்தகைய அவரது நம்பிக்கையை தெளிவாகக் காட்டுகிறது அவரது புகழ்பாடல் (லூக் 1:46-55).

இயேசுவின் நம்பிக்கையும் இத்தகையதே. “ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே. இப்போது பட்டினியால் இருப்போரே நீங்கள் பேறு பெற்றவர்கள் . ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள்” லூக் 6:20-21 என்பது இயேசுவின் சமவெளிப் பொழிவு. “ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார். லூக் 4:18-19 என்பது அவரது பொதுப்பணியின் துவக்க அறிக்கை. பழைய ஏற்பாட்டு விடுதலைப் பயண அனுபவத்திலும் இறைவாக்கினர் போதனையில் வேரூன்றிய இந்த நம்பிக்கை இயேசுவிடம் அரும்பி வளர்ந்ததற்கு மரியாவும் ஒரு காரணம் என்பதே இயல்பானது.

இவ்வாறு இயேசுவின் மனித உடலுக்கும் உயிருக்கும் மட்டும் அன்று;அவரது வீர நம்பிக்கைக்கும் ஒரு வகையில் மரியாள் அன்னை ஆனார். “கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கின்றவர்களே எனக்குத் தாயும் சகோதரரும் ஆவர் (லூக் 8:21) எனும் இயேசுவின் கூற்றும் இதனை உண்மை எனக் காட்டுகிறது. மரியாவின் ஊனியல்பு தாய்மையை விட அவரது விசுவாசத் தாய்மை உயர்ந்தது என இயேசு தெளிவுபடுத்துகின்றார். இவ்வாறு மரியாவின் தாய்மையினது உள்ளியல்பும், உயர் சிறப்பும் அவரது நம்பிக்கையே. பெற்றெடுத்தால் மட்டுமே அன்னையல்ல. மாறாக தன் நம்பிக்கையை ஊட்டி வளர்த்ததால் அவர் இயேசுவின் தாய்.

### இயேசுவின் அன்னை

மரியவைப் பற்றி நமக்குத் தெரிந்த வரலாற்று உண்மைகள் மிகச் சில. அவற்றுள் மிக உறுதியானதும் முக்கியமானதும் அவர் இயேசுவின் அன்னை என்பதுவே. இதற்கு புதிய ஏற்பாடும் கிறிஸ்தவ மரபும் தெளிவான திடமான சான்று பகர்கின்றன. மரியாவை இயேசுவின் அன்னை என மறுப்போர் இன்று யாரும் இல்லை. ஆனால் கிறிஸ்தவத்தின் தொடக்க இரண்டு நூற்றாண்டுகளில் இதனை ஏற்க மறுத்தோர் சிலர் இருந்தனர். அவர்கள் தோற்றக் கொள்கையினர்(Docetism), ஊனியல்பு கொண்ட உடல் இழிவானது, தீயது, புனிதரான இறைவனுடன் இணைய இயலாதது என அவர்கள் கருதினர். இக் கண்ணோட்டத்தின்படி இறைவன் உண்மையில் மனிதரானார், இயேசு மனித உடலைக் கொண்டிருந்தார் என்பதை ஏற்க மறுத்தனர். இயேசு இறைவன், மனிதன் அல்ல; அவரது மனிதத்தன்மை அவர் ஏற்ற மாயை அல்லது வெளித்தோற்றம் என்பதுவே அவர்கள் கோட்பாடு. இதனால் மனித உடல் சார்ந்த முறையில் உண்மையாகவே இயேசுவின் தாய் என அவர்கள் கருதவில்லை. மாறாக அவர்கள் பார்வையில் இயேசுவின் உண்மையான தாய் தூய ஆவியே. இத்தகைய கருத்துக்களை பிலிப்பு எழுதிய நற்செய்தி என்னும் திருமுறைப் புறநூலில் நாம் தெளிவாகக் காணலாம்.

தோற்றக் கொள்கையினரின் கருத்துக்களுக்கு ஆணித்தரமான மறுப்புக்கள் புதிய ஏற்பாட்டு நூல்களில் காணக்கிடக்கின்றன. ‘‘கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக..... அனுப்பினார்(கலா 4:5). என இயேசுவின் உண்மையான மனிதப் பிறப்பை புனித பவுல் அடிகளார் வலியுறுத்துகின்றார். ‘‘மரியாவின் மகன் (மாற்கு 6:3) என மாற்கு நற்செய்தி வருணிக்கிறது. நான்கு நற்செய்திகளுமே ‘‘அவருடைய தாய்’’ எனக் குறிப்பிடுகின்றது. (மத் 2:18;2:11;12:46;13:55; மாற்கு 3:31; லூக் 2:34;48:51;8:19; யோவான் 2:519:25.

திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கையும் ‘‘கன்னி மரியாவிடமிருந்து தூய ஆவியால் மனு உடல் எடுத்து மனிதன் ஆனார்’’. என இயேசுவின் பிறப்பை தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு மரியா இயேசுவின் அன்னை எனும் உண்மை கிறிஸ்தவத்தின் தொடக்க முதல் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### பெற்றெடுத்தால் மட்டும் அன்னையா?

தாய்மை என்பது பிள்ளையைப் பெற்றெடுப்பது மட்டும் அல்ல. ஈன்று புறம் தருவதுடன் தாய்மையின் பணி முடிவதில்லை. பெற்ற பிள்ளைக்கு அன்பு காட்டி, அமுது ஊட்டி, அதனை வளர்த்து ஆளாக்கி விடவேண்டும். இதில்தான் தாய்மை முழுமை அடைகிறது. மரியாவின் தாய்மை இத்தகைய நிறைவைப் பெற்றதே. ஏனெனில் மரியா இயேசுவைப் பெற்றாள், பேணி வளர்த்தாள், அன்புடன் அறிவு ஊட்டினாள், பாலுடன் பண்பும் ஊட்டினாள். உண்ணக் கொடுத்த உணவுடன் உயர்ந்த இலட்சியங்களையும் எண்ணங்களையும் அவருக்குத் தந்தாள்.

இயேசு உண்மை மனிதன். அப்படியெனில் பிறப்பில் மட்டும் அன்று வயதிலும் வளர்ச்சியிலும் கூட அவர் ஏனைய மனிதக்







இருந்த மேலமங்கலம் என்ற ஊரில் கி.பி. 1929ஆம் ஆண்டு திரு. சவரிமுத்து மற்றும் திரு.ச.அருளானந்து அவர்களும் வியாகுல அன்னைக்கு ஆலயம் எழுப்பினர். கட்டப்பட்ட ஆலயமானது கி.பி. 1929ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டது.

அவ்வூரைச் சார்ந்த சலவைத் தொழிலாளர்கள், தங்கள் சலவைத் தொழிலுக்குத் தேவையான மண்ணெடுத்து வர அருகாமையில் இருந்த ஒரு ஆற்றில் மண்ணெடுக்கச் சென்றனர். அவர்கள் மண்ணெடுத்துக் கொண்டிருக்கும் போது, ஒரு சத்தம் கேட்க அப்பகுதியை அவர்கள் கையால் தோண்டிப் பார்த்தனர். என்னே ஆச்சரியம்! அவ்விடத்தில் மரத்தாலான ஒரு வியாகுல அன்னையின் திருஉருவம் அவர்களுக்கு கிடைத்தது. அந்த திருஉருவம் வேதக்காரர்களுக்கு உரியது என்பதை உணர்ந்த அவர்கள், மண்ணோடு மாதாவையும் ஊருக்கு கொண்டு வந்து திருவாளர் சவரிமுத்துவிடம் ஒப்படைத்தனர். சவரிமுத்து அவர்கள் ஆலயத்தில் வியாகுல அன்னையின் திருஉருவத்தை வணக்கத்திற்காக வைத்தார். இத்திருஉருவம் தற்போது எங்கிருக்கிறது என்பது தெரியவில்லை.

பிரித்தானியர்கள் இந்தியாவை ஆண்ட பொழுது, உலகமெங்கும் பரவியிருந்த தங்களின் காலனிகளுக்கு இந்தியாவிலிருந்து வேலைக்கு ஆட்களைக் கொண்டு சென்றார்கள். தமிழகத்திலிருந்து பர்மா, இலங்கை, மலேசியா, தென் ஆப்ரிக்கா, பிஜி, மொரீசியஸ் முதலிய இடங்களுக்கு சென்றனர். தமிழர்கள், வந்தாரை வாழவைப்பதோடு நில்லாமல், சென்ற இடங்களையெல்லாம் வளப்படுத்தி செழுமையாக்கினர். அங்ஙனம், பர்மாவின் வளர்ச்சியில் தமிழர்களின் பங்கு அன்றும், இன்றும் முக்கியமானதாகும். அங்ஙனம் பர்மா சென்றோரில் பெரும்பாலானோர் சிவகங்கை பகுதியைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பர்மாவில் வசித்தாலும் தங்களின் தாய் மண்ணை அவர்கள் எப்போதும் உளமார நேசிக்கின்றனர். அவ்வகையில் தாயகம் வசித்த தங்களின் உறவினர்களுக்கு வியாகுல அன்னையின் திருசுரூபத்தை அனுப்பினர். அத்திருஉருவமானது மேலமங்கலத்தில் உள்ள ஆலயத்தில் வைத்து வணங்கப்பட்டது.

கி.பி. 1956ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாளை தமிழகம் ஒரு போதும் மறவாது. கடும் புயற்காற்றுடன் பெய்த கனமழை தமிழகத்தையே நிலைகுலையச் செய்தது. தமிழகத்தின் எல்லா ஆறுகளும்

கரைபுரண்டோடின. அரியலூர் அருகில் இருந்த மருதையாறும் அதற்கு விதிவிலக்கல்ல. கரைபுரண்ட வெள்ளம் அந்த ஆற்றின் குறுக்கே சென்ற இரயில் இருப்பு பாதையையும் விட்டுவைக்கவில்லை. மண்ணரிப்பினால் இருப்பு பாதையும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதையறியாமல் அவ்வழியே சென்னையிலிருந்து தூத்துக்குடி நோக்கி சென்ற மெயில் ஜலசமாதி ஆனது. அந்த விபத்தில் 104 பேர் இறந்தனர். பலர் கண்டுபிடிக்கமுடியாமல் காணமற்போயினர்.



அதே நாளில் வானம் பார்த்த பூமியாக இருந்த மேலமங்கலத்திலும் பேய் மழை பெய்தது. ஆசையாய் கட்டிய ஆலயம் மண்ணால் உருவாகியிருந்ததால் இடிந்து விழும் நிலைக்குச் சென்றது. ஆலயத்தில் இருந்த வியாகுல அன்னையின் திருஉருவத்தை அங்கிருந்து எடுத்து பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்ல மக்கள் விரும்பினர். ஆனால், ஆலயத்தில் நுழைவாயில் சுரூபத்தை விட சிறிதாக இருந்தது. எனவே, ஆலயத்தின் பின்புற சுவரை உடைத்து சுரூபத்தை மீட்டெடுத்து சிவகங்கையிலிருந்த ஆலயத்தில் வைத்தனர். அந்த ஆலயமானது மேலமங்கலத்தில் மீண்டும் கட்டப்பட்டு புனித வியாகுல அன்னைக்கு அர்ச்சிக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்குள் தற்போது ஆரோக்கிய அன்னையின் திருஉருவம் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயம் தற்போது திரு. செபாஸ்டின் அவர்களால் பராமரிக்கப்படுகிறது.

பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்ட வியாகுல அன்னையின் திருசுரூபமானது சிவகங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு, தற்போது ஆலயத்தின் முன் உள்ள கெபியில் வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இந்த கெபியானது கி.பி. 2000ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள் அர்ச்சிக்கப்பட்டது.

பழமையான ஆலயத்திற்கு வியாகுல அன்னையின் திருஉருவத்தைக் கொண்டு வந்த சலவைத் தொழிலாளர்கள் கிறிஸ்தவர்களாக மாறி, தாங்கள் அன்னையின் மீது பக்தியையும், ஆண்டவர் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையையும் இந்த ஆலயத்திற்கு வந்து செபிப்பதன் மூலமும், தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பின் பொருத்தனைகள் செலுத்துவதன் வழியாகவும் வெளிப்படுத்தி கொண்டே இருக்கின்றனர். அதிலும் குறிப்பாக கிறிஸ்து





# மரியா - கடவுளின் கடிதம்

16

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.



**மரியா தாய்மையின் இலக்கணம்**

எத்தனையோ சிறப்புகளுக்கு உரியவராக மரியாவைக் கிறிஸ்தவ திரு அவை ஏற்றிப் போற்றுகின்றது. அவை அனைத்தினின்றும் உயர்ந்ததாகவும் அவற்றிற்கு ஊற்றாகவும் கருதப் பெறுவது அவரது தாய்மையே. அவரது உதிரத்தில்தான் இயேசு மனித உருவம் கொண்டார். தன் உதிரத்தையே பாலாக்கி ஊட்டி வளர்த்தவர் அவர். எனினும் உயிர் அனைத்தும் உய்ய தன் ஒரே மகனையே பலிகொடுத்து உலகத் தாயாக உயர்ந்தவர் அவர். இந்த தியாகத் தாய்மையே அவரது மாபெரும் மகிமை. அவருடைய எண்ணற்ற சிறப்புகள் அனைத்திற்கும் முதலும் மூலமுமாகிய அடிப்படைப் பெருமை.


கத்தோலிக்க மரபில் மரியா நான்கு வகைகளில் "அன்னை" என்று அழைக்கப்பெறுகிறார். 1. "இயேசுவின் தாய்" என அவரை நற்செய்தி நூல்கள் குறிப்பிடுகின்றன. 2. "இறைவனின் தாய்" என அவரை எபேசு திருச்சங்கம் அறிக்கையிடுகின்றது. 3. "திருச்சபையின் தாய்" என கத்தோலிக்க திருஅவையின் மக்கள் பக்தி பரவசத்தோடு அழைக்கின்றனர்.

"இறைவனின் அன்னை" என மரியாவை பிரிந்த சபையினர் மற்றும் பொதுவாக எல்லா சபையின் கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். இருப்பினும் திருச்சபையின் தாய் என்று கருதுவது இல்லை. இவ்வாறு மரியாவைப் போற்றுவதும் வணங்குவதும் கத்தோலிக்க மரியியல் மிகைப்படுத்துதலின் முக்கிய விளைவும் வெளிப்பாடும் என்பதுமே அவர்களின் முடிவு ஆகும்.

அண்மைக் கால ஆய்வுகள் பல மரியாவின் தாய்மைக்கு பல்வேறு புதிய பொருள் விளக்கங்கள் தந்துள்ளன. மேலும் அதனை அவரின் விசுவாசத்தோடு ஆழத் தொடர்புப்படுத்தியும் பார்க்க முயல்கின்றன. இத்தகைய ஆய்வுகளின் முடிவுகள் பல திருஅவை ஆசிரிய படிப்பினைகளிலும் இடம் பெற துவங்கியுள்ளன. இத்தகைய ஆசிரியப் படிப்பினைகள் ஆய்வுகள் வழிநின்று மரியாவின் தாய்மையின் பல்வேறு பரிமாணங்கள் யாவை அவரது நம்பிக்கையின் அடிப்படையில் அவரது தாய்மை காட்டும் புதுப் பொருள் என்ன மற்றும் இன்றைய நமது வாழ்விற்கு அவை சொல்லும் அர்த்தங்கள் யாவை என இக்கட்டுரையின் பகுதிகளில் சிந்திப்போம்.



# முத்திப்பேறு ஜிரோலமோ (ஜெரோம்) OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

ஜிரோலாமோ (சுமார் 1410)பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இத்தாலி நாட்டில், சான் ஆஞ்செலோ இன் வாதோ என்ற ஊரில் பிறந்தார். அவர் இளம் வயதிலேயே மரியின் ஊழியர் சபையில் சேர்ந்து, தன்னுடைய சொந்த ஊரிலேயே உள்ள மரியின் ஊழியர் இல்லத்தில் துறவியாக வாழ்ந்து வந்தார். பின்னர், தனது படிப்பிற்காக சிறிதுகாலம் தன் சொந்த ஊரை விட்டு சென்று, குருவாக அர்ச்சிக்கப்பட்டபின் தன்னுடைய சொந்த ஊருக்கே துறவற குருவாக அனுப்பப்பட்டார். (இவர் வாழ்ந்த காலகட்டத்தில், அனைத்து துறவிகளும் படிப்பதற்கு அனுப்பப்படுவதில்லை. மிகவும் திறமை வாய்ந்த இளம் துறவிகளை மட்டுமே தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தனர். அதிலும் அனைவரும் பட்டம் பெற்று திரும்புவதில்லை. ஆனால், ஜிரோலாமோ குறுகிய காலத்திலேயே பட்டம் பெற்று தன்னுடைய சொந்த ஊரில் உள்ள மரியின் ஊழியர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டார்.) அவர் கற்றுக்கொண்ட தத்துவயியல் மற்றும் இறையியலை தன்னுடைய அன்றாட வாழ்விலும், மேய்ப்புப்பணியிலும் பயன்படுத்தினார். அவர் தன்னை வருத்திக்கொண்டு தவ செப முயற்சியில் பங்கெடுத்தார். ஆனால், அவருடைய மகிழ்ச்சி என்றும் குறைந்ததே இல்லை. ஒரு சில தலைமை பொறுப்புகளை ஏற்று சபையை நன்முறையில் வழிநடத்தினார். மக்களின் ஆன்மிக தேவையை மட்டுமல்ல மற்ற தேவைகளையும் நன்றாக அறிந்திருந்ததால், ஞானத்தோடும் புத்தி கூர்மையோடும் அவரால் மக்களை வழிநடத்த முடிந்தது. எனவேதான் இவர்காலத்தில் வாழ்த்த ஆட்சியாளர்கள் இவரிடம் ஆலோசனை கேட்க அடிக்கடி துறவற இல்லம் வருவார்கள். மேலும், இவரை ஒரு முக்கியமான மதிப்புமிக்க ஆட்சி பணியில் அமர்த்தவும், ஆசைப்பட்டார்கள். ஆனால் அவர் தன் துறவற இல்லம் தவிர்த்து வேறு எங்கும் செல்ல மாட்டேன் என்று உறுதியோடு கூறி விட்டதால், அவரை கட்டாயப்படுத்தவில்லை. அவர் சுமார் 1468 ஆம் ஆண்டு இறந்தார். ஆனாலும் மக்கள் கூட்டம் அவரின் பரிந்துரையை தேடி அவருடைய கல்லறைக்குச் சென்றனர். அவரது மரணத்திற்குப் பிறகு, அற்புதங்கள் அதிகமாக நடந்ததால் மக்களிடையே ஜிரோலாமோ ஒரு புனிதராகப் போற்றப்பட்டார். இன்றும் அவரது உடல் சிதைக்கப்படாமல், நம்முடைய மரியின் ஊழியர் தேவாலயத்தின் பலிபீடத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறது. இன்றும் விசுவாசிகள் அவரை வணங்கி வருகின்றனர். 1775 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பத்திநாதர் நம்முடைய முத்திப்பேறு ஜிரோல்மொவிற்கு வணக்கம் செலுத்தும் வழிபாட்டை உறுதிப்படுத்தினார்.








பிறப்பு விழா நாட்களில் காப்பரிசி கொண்டு வந்து அனைவருக்கும் அளித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.

இங்கிருக்கிற அனைவரையும் அன்னை ஒரே குடும்ப உணர்வில் வழிநடத்துகிறார் என்பதற்கு இங்கு வாழும் ஒரு குடும்பம் சாட்சியாக விளங்குகிறது. வியாகுல அன்னையின் ஆலயத்தை கி.பி. 1929ல் கட்டி எழுப்பிய திரு. இரு. சவரிமுத்து அவர்களின் வழிவந்த குடும்பத்தில் உள்ள சகோதரர்கள் அனைவரும் தங்களின் குடும்பங்களுடன் ஒரே வளாகத்தில் வசிக்கின்றனர். குடும்பத்தினர் அனைவரும் ஒன்று கூடி செபிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இக்குடும்பத்திலிருந்து ஒருவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு சிவகங்கை மறைமாவட்டத்தில் பணியாற்றுகிறார். இவர் ஒரு எளிய முன்மாதிரிகையான, மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை உள்ளவராக திகழ்கிறார் என்பது அன்னையின் கரத்தில் வளர்வோர் என்றும் ஆண்டவருக்கு உகந்தவராக இருப்பார் என்பதற்கு சான்றாக உள்ளது.

மேலமங்கலத்தில் உள்ள தூய வியாகுல அன்னை ஆலயம் புதுப்பிக்கப்பட்டு கி.பி. 2002ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் நாள் சிவகங்கை ஆயர் மேதகு எட்வர்ட் பிரான்சிஸ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு, அருட்பணியாளர். ஆனந்தம் அடிகளார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஆலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு கி.பி. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டது.

பாரம்பரிய மிக்க இந்த வியாகுல அன்னையின் இந்த ஆலயத்தையும், அதன் வரலாற்றையும் அறிய உதவிய புளியால் பங்குத் தந்தை அருட்பணி. அகஸ்டின் அவர்களுக்கும், இந்த ஆலயத்திற்கு நேரடியாக சென்று கள ஆய்வு செய்து செய்திகளையும், புகைப்படங்களையும் எடுத்து அனுப்பிய முப்பையூர் செனாரியோ மையம் பங்குத் தந்தை அருட்பணி. பெர்னார்டின் ம.ஊ.ச. அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**திருப்பயணம் தொடரும்..................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## லூக்கா



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 3 |
| | 6 | | | | | | | 5 | |
| | | | | | | | 9 | | |
| | | | 14 | | | | | | |
| | | | | | | 13 | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | | | | 11 | | |
| | | 10 | | | | | X | | |
| | 7 | | | | | | | 8 | |
| 2 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1)அவர் தூபம் காட்டுகிற வேளையில் மக்கள் கூட்டத்தினர் ..................... வெளியே இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தனர்.

3)மறைநூல் அறிஞரும் பரிசேயரும் .................... குற்றம் காணும் நோக்குடன் ஓய்வுநாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தனர்.

5)நிகழ்ந்தவற்றையெல்லாம் குறுநில மன்னன் ஏரோது கேள்வியுற்று மனம் குழம்பினான். ஏனெனில் சிலர் "இறந்த யோவான்.................... எழுப்பப்பட்டார்" என்றனர்.

8)அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது.....................அவர் வறுமையில் வாடினார்

9)உமக்குக் ......................தெரியும் அல்லவா? விபசாரம் செய்யாதே. கொலை செய்யாதே. களவு செய்யாதே. பொய்ச் சான்று சொல்லாதே. உன் தாய் தந்தையை மதித்து நட என்றார்.

11).................. எங்கும் குடியிருக்கும் எல்லார்மீதும் அந்நாள் வந்தே தீரும்.

13) பிலாத்து அவரை நோக்கி "நீ யூதரின் ...................?" என்று கேட்க அவர் அவ்வாறு நீர் சொல்கிறீர் என்று பதில் கூறினார்.

**இடமிருந்து வலம்**

2)தம்மிடம் திருமுழுக்குப் பெறப் புறப்பட்டு வந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு யோவான் விரியன் பாம்புக் குட்டிகளே ................. சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்?

4)அதன்பின் இயேசு நயீன் என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய சீடரும் பெருந்திரளான ................. அவருடன் சென்றனர்.







ஆலோசனையிலும் வல்லமையிலும் நிறைந்திருப்பார். மோயீசன், யாக்கோபு, ஆபிரகாம் போன்று அறிவிலும் ஆண்டவரைப்பற்றிய அச்சத்திலும் திளைத்திருப்பார். இத்தகைய இயேசுவை நம் உள்ளங்களில் வரவேற்போம். திறந்த உள்ளத்தோடு இருப்பின் தூய ஆவியாரின் வரங்கள் அனைத்தும் இயேசுவின் திருவருகையால் நமக்கு கிடைக்கும் என்பது திண்ணம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இவ்வாசகம் மறைநூலின் முக்கியத்துவம் பற்றியும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வின் தேவை பற்றியும் எடுத்துக்கூறுகிறது. மறைநூல் நமது வாழ்வை சீராக்குவதற்கும் நேர்மையாக வாழவும் கடவுளால் அருளப்பட்டுள்ளது. தலையாகிய இயேசுவோடு உறுப்புகளாகிய நாம் அனைவரும் இணைந்து தந்தையாகிய கடவுளுக்குப் புகழ்சாற்றுவதே இறைபணிகளுக்கெல்லாம் மேலான இறைபணியாகும். எனவே ஒருமித்த மனதோடு இணைந்து ஜெபிப்போம் . பன்மடங்கு பலன் பெறுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் திருமுழுக்கு யோவானைப்போன்று பிற இன மக்களுக்கு ஓர் முன்மாதிரியாக வாழ்ந்து எல்லோரையும் மன மாற்றத்திற்கு அழைத்துவரும் துறவிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இத்திருவருகைக் காலத்திலே நாங்கள் எங்களது பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு உம்மைப் பற்றிக் கொள்ளவும் உமக்கு உரிய மக்களாக வாழவும் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களிடையே இருக்கின்ற சண்டை சச்சரவுகள் பகைமை உணர்வு மறைந்து எல்லோரும் ஒருமித்த மனதோடு சகோதர சகோதரிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, மெசியாவின் வருகை எங்களுக்கும் எங்கள் மக்களுக்கும் சமாதானம், மகிழ்ச்சி, நம்பிக்கை அளிக்கின்ற வருகையாக அமைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அருள் பார்வை கிடைத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இத்திருவருகை காலத்திலே ஊனியல்பிற்கான செயல்களைவிட்டுவிட்டு ஆவிக்குரிய மக்களாக வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, திருவருகைக் காலம் நம்பிக்கையின் காலம் என்பதை உணர்ந்த நாங்கள் உமது மகனின் வருகை எங்களுக்கும் எங்கள் குடும்பங்களுக்கும் அமைதி, மகிழ்ச்சி, மற்றும் சமாதானம் தருகின்ற நிகழ்வாக இருக்கும் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடு வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உமது மீட்பு எல்லோருக்கும் உரியது என்பதை உணர்ந்து எங்களிடையே இருக்கின்ற வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையுடன் உமது வருகைக்காக காத்து இருக்க துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**திருவருகைக் காலத்தின் 2 ஆம் ஞாயிறு (04.12.2022)**

**எசா 11:1-10 உரோ15:4-9 மத் 3:1-12**

**முன்னுரை**

மெசியாவின் வருகைக்காக ஆவலுடன் காத்துக்கொண்டுள்ள நாம் நமது பாவங்களை நியாயப்படுத்தாமல் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு இறைவன் தரும் புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்ள இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இறைவனை சந்திப்பதற்கு நம்மை நாமே தயாரித்துக்கொள்வது எவ்வளவு அவசியமானது என்பதை உணர்த்துவதே திருவருகைக்காலம். நம்மை நாமே தயாரித்துக்கொள்வதற்கு உதவியாகத்தான் திரு அவை திருமுழுக்கு யோவானை இன்று நம்முன் நிறுத்துகிறது. அன்று மெசியாவின் வருகைக்காக மக்களைத் தயாரித்த திருமுழுக்கு யோவான் இன்றும் நம்மை நாமே எப்படி தயாரிக்க வேண்டும் என்பதற்கான பதிலை தருகின்றார். மக்களின் மனமாற்றத்திற்காக அவர் விடுக்கின்ற செய்தி பாவ மன்னிப்பு அடைய மனம் மாறி திருமுழுக்குப் பெறுங்கள் என்பதே அதாவது பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு புதிய வாழ்வை தழுவிக்கொள்வதே உண்மையான மனமாற்றம். அத்தகைய மனமாற்றம் வெறுமனே பேச்சோடு நின்றுவிடாமல் செயலில் வெளிப்பட வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். ஆண்டவரே ஆண்டவரே என்று வாய்மொழி வேண்டுவதால் மட்டும் பயனில்லை . ஆண்டவரின் விருப்பப்படி நடத்தலிலேதான் நமது மனமாற்றம் வெளிப்படவேண்டும். தந்தையின் விருப்பமோ இயேசுவின் அன்பு கட்டளையை, நம் அன்றாட இன்னல் இடைஞ்சல்களுக்கிடையே நம் சொல் செயல்களில் வாழ்ந்து காட்டுவதே. இதை செயல்படுத்த தாழ்ச்சி என்னும் புண்ணியம் அவசியம். அக்கொடை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

ஆண்டவருடைய ஆவி தளிராகிய கிறிஸ்துவின் மேல் தங்குவதால் அவர் சாலமோனைப்போன்று ஞானத்திலும் மெய்யுணர்விலும் சிறந்து இருப்பார். தாவீதைப்போன்று





6)எவரும் விளக்கை ஏற்றி நிலவறையிலோ மரக்காலுக்குள்ளோ வைப்பதில்லை மாறாக ..................உள்ளே வருவோர்க்கு ஒளி கிடைக்கும்படி அதை விளக்குத் தண்டின்மீது வைப்பர்.

7)பதினெட்டு ஆண்டுகளாகத் தீய ஆவி ................ உடல்நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார்.

10) அவர்கள் அவரை நோக்கி எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் ...............? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.

12)நேரம் ஆனதும் இயேசு திருத்தூதரோடு ................ அமர்ந்தார்.

14)அப்பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அப்பெண்களை நோக்கி ............... இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?

**கீழிருந்து மேல்**

1)ஏனெனில் ஆண் தலைப்பேறு ................ ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது.

2)அலகை சோதனைகள் அனைத்தையும் முடித்தபின்பு ஏற்ற காலம் ..................அவரைவிட்டு அகன்றது.

7)பதினெட்டு ஆண்டுகளாகத் தீய ஆவி .............. உடல்நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார்.

8)இயேசு தம் சீடருக்குக் கூறியது: செல்வர் ஒருவருக்கு வீட்டுப் பொறுப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் தம் தலைவரின் உடைமைகளைப் பாழாக்கியதாக ................ பழி சுமத்தப் பட்டது.

10)அப்போது அவர் தம் பணியாளர்கள் பத்துப் பேரை அழைத்து பத்து மினாக்களை அவர்களிடம் கொடுத்து அவர்களை நோக்கி நான் வரும்வரை இவற்றை வைத்து வாணிகம் ............. என்று சொன்னார்.

**மேலிலுந்து கீழ்**

3)அவரோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து ................ வேண்டிவந்தார்.

4)அவளுடைய பெற்றோர் .............. போயினர். நடந்ததை எவருக்கும் சொல்லவேண்டாம் என்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார்.

5)............... நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்று எழுதியுள்ளது என்றார்.

6)தொழுகைக் கூடங்களுக்கும் ஆட்சியாளர் அதிகாரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்போது எப்படிப் பதிலளிப்பது என்ன பதில் ........... என்ன பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

9)அவர் இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வதைவிட அவ்வாறு செய்பவரது கழுத்தில் ஓர் எந்திரக் கல்லைக் கட்டி அவரைக் ............. தள்ளிவிடுவது அவருக்கு நல்லது.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-11-2022**

**சென்ற மாதத்தின் விடைகள் மாற்கு**

**வ. இ.** **1.** 1:17;**4**. 8:36;**6.** 10:1;**7.** 13:9; **9.** 16:8;**12**.6:32;**13**.7:4**;15.** 10:2

**இ. வ.** **2.** 3:18; **3.** 6:5; **5.** 8:5; **8.** 14:3; **10.**2:20; **11.**4:2; **14**. 9:17

**மே. கீ.** **1.** 2:21; **2.**4:10; **5.** 9:6; **6.** 11:12;

**கீ. மே.** **3.** 5:21; **4.** 7:6; **7.**12:3; **8.**15:39; **9.**1:11;**10.**3:4;**12**.5:11 .

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு ⑥



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

### அன்னையின் முதல் தரிசனம்

அன்று ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை
ஆயிரத்து தொள்ளாயிரம் பதினேழாம் ஆண்டு
மே திங்கள் பதின்மூன்றாம் நாளது
மேன்மைத் திருப்பலி அனுசரித்து மகிழ்ந்தனர்
காலைச் சிற்றுண்டி முடித்தப் பின்னர்தாம்
வேலை என்னவோ தொடங்கி விட்டனர்
நேரம் நண்பகல்தான் மேகம் கருக்கவில்லை
வெயிலோ குறையவில்லை மழையும் பொழியவில்லை
சூரிய ஒளிபோல மற்றொரு வெளிச்சம்
கிழக்கு விடுத்து மேற்கு தொடுத்து
விரைந்து நகர்ந்து படர்ந்து வந்தது
பயந்து நடுங்கி பதுங்க முனைந்தனர்.
அங்கே கருத்த அசிந்திரா மரத்தினடியில்
அடைக்கலம் புகுந்தனர் அதிசயம் வியந்தனர்
மூவேளைச் செபத்துடன் வானவர் செபத்தையும்
முழங்கி செபித்ததுடன் முழங்காலில் நின்றனர்.
பட்டொளி வெளிச்சம் பக்கத்திலே வந்தது
பார்த்த நொடிப்பொழுதே முன்னமே நின்றது
பதினான்கு வயதொத்தஎழிலார்ந்த நங்கை
பளிச்சென்ற ஆடையுடன் முகமொளிர்ந்த நங்கை
பூமியில் யாருமே அவர்போல் அழகில்லை
பூந்தளிர் வாசமும் அவருக்கு நிகரில்லை
வாட்டமோ நாட்டமோ முகத்தினில் இல்லை
சாந்தமே நிரம்பின பூவிழியோ கொள்ளை.
மரத்தினில் பதித்தனள் மெல்லிய பாதம்
கரத்தினில் படித்தனள் பொன்னிற வேதம் (செபமாலை)
தாபோர் மலையின் மாட்சிமை போன்றே
அசிந்திரா மரமும் காண்பது இன்றே.
அருளின் ஒளிதான் அகத்தை நிரப்ப
ஆனந்த துளிதான் முகத்தை சிவக்க
அப்படி மூவரும் பரவசம் பெற்றனர்
சொற்படி விளக்கிட முடியாமல் திளைத்தனர்.






நாமும் நோவா போன்று ஆண்டவரில் விசுவாசம் வைத்து வாழ்வோமா அல்லது நோவா காலத்து மக்கள் போன்று குடித்தும் கேளிக்கையால் நேரத்தை போக்கியும் இறைவனை மனம் நோக வைப்போமா? நோவா காலத்து பெருவெள்ளம் மக்களின் அக்கிரமங்கள் மேல் இறைவன் கொண்ட கோபத்தின் வெளிப்பாடு. எந்நேரத்திலும் இறைவனது கோபம் வெளிப்படலாம். எவ்வேளையிலும் இறைவன் நம் நடத்தையை கணக்கிட வருவார் என்பதை உணர்ந்து மனம் மாறிய வாழ்க்கை நடத்த முயற்சி செய்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசுவின் வருகைக்காக காத்திருக்கும் திருஅவை புதிய எருசலேமை நம் கண்முன்னே வைக்கிறது. எருசலேமிலிருந்தே ஆண்டவர் வாக்கு புறப்படும் என்று கூறி இறைவன் தரும் மீட்பை நம்பிக்கையுடன் எதிர்பார்க்க எசாயா இறைவாக்கினர் அழைக்கின்றார். இறைவன் தரும் இம்மீட்பு தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலருக்கு மட்டுமன்று எல்லோருக்குமுரியது. எனவே நம்மிடமுள்ள வாள்கள், ஈட்டிகள் ஆகிய சுய பற்று , அநீதியான வாழ்வு , தீய குணங்கள் முதலியவற்றை தவிர்த்து கலப்பை கொழுக்கள், அரிவாள்கள் ஆகிய பிறருக்கு நன்மை பயக்கும் அன்பு நீதி நேர்மையான வாழ்வு மேற்கொண்டு இறைவனது மீட்பை பெற முயல்வோம் இத்திருவருகைக் காலத்தில்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இருளாகிய பாவ வாழ்வை விட்டகன்று இயேசு கிறிஸ்துவாகிய ஒளியை அணிந்துகொள்ள புனித பவுல் இத்திருவருகைக் காலத்தில் அழைப்பு விடுக்கின்றார். இதனை நமது மனதில் இருத்தி இறைவனது மீட்பிலே பங்குபெறும் நிலையினை அடைவதற்கான செயல்களை செய்வோம். இத் திருவருகைகாலத் தின் ஒவ்வொரு நாளும் மீட்பர் இயேசுவின் நாளாக அமைய நம்முடைய செயல் முறைகளை திருத்தி அமைப்போம்.



**மன்றாட்டுக்கள்.**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தமது விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்ந்து நோவாவைப் போல ஆண்டவரது

மட்டுமன்றி சிதறிக்கிடந்த எல்லா மக்களுக்காகவும் கிறிஸ்து இறந்தார் என்ற உண்மையை எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்கு செவி மடுப்போம்.

**மன்றாட்டுக்கள்.**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள் , குருக்கள் , துறவியர், பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் அரசுடைமையில் பங்குபெற்று பணிவிடைபெற அன்று பணிவிடை புரியவே என்ற விருதுவாக்கை வாழ்வாக்கிட தேவையான அருள்வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எம் நாட்டு தலைவர்கள் கிறிஸ்துவின் படிப்பினையை தமதாக்கி உண்மையும், நீதியும், அன்பும், அமைதியும், புனிதமும் கொண்ட அரசை கட்டியெழுப்ப தேவையான இறைஞானத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, இவ்வுலகை அடிமைப்படுத்தியுள்ள அநீத அரசியல் சினிமா நாயகர்களை வழிபடுதல் , பணத்திற்கும் பதவிக்கும் விலைபோதல், பாவ அடிமைத்தனம் இவற்றிலிருந்து இவ்வுலகை மீட்டு கிறிஸ்துவின் அன்பின் அரசு இவ்வுலகில் மலர துணைபுரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, கிறிஸ்துவைப்போல் நாங்கள் எங்களது வாழ்வை பலருக்காக இழக்கவும், இறையாட்சியின் மதிப்பீடுகளை செயல்படுத்தி அதன்வழியாக கிறிஸ்துவின் இறையாட்சி மீண்டும் இம்மண்ணில் மலர நாங்கள் உழைத்திட தேவையான இறையருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு (27.11.2022)**

**எசா2:1-5 உரோ13:11-14 மத்24:37-44**

**முன்னுரை**

'காத்திருத்தல் அல்லது எதிர்பார்த்திருத்தல்' என்பது வாழ்வில் ஒரு தவிர்க்க முடியாத அங்கம். நபர்களுக்காக அல்லது நிகழ்ச்சிகளுக்காக காத்திருத்தல் என்பது நாள்தோறும் நமது வாழ்வில் நாம் பார்க்கின்ற ஒன்று. திரு அவையிலும் ஒரு மாபெரும் நிகழ்வை எதிர்பார்த்து காத்திருக்க ஆரம்பிக்கும் நாள் இன்றைய நாள். இறைவனது பிறப்பை ஆவலோடு எதிர்பார்த்திருக்க அழைக்கப்படுகின்றோம். இதுவே திருவருகைக்காலம். திருவருகைக் காலம் எதிர்பார்ப்பின் காலம், நம்பிக்கையின் காலம், திருவழிபாடு ஆண்டின் தொடக்க காலம். கிறிஸ்துவின் பிறப்பு பெருவிழாவிற்காக நம்மை தயாரிக்கும் காலம்.

எப்படி தயாரிப்பது? என்ற கேள்விக்கும் பதிலைத்தான் விழிப்பாயிருங்கள் என்ற ஒற்றை வார்த்தையை பதிலாக இயேசு தருகின்றார். விழிப்பாயிருத்தல் என்பது ஒவ்வொரு வினாடியும் கருத்தோடும் கவனத்தோடும் வாழ்வை அணுகுவது. நோவாவுக்கு ஆண்டவரின் அருள்பார்வை கிடைத்தது, தனது விசுவாசத்தால் இறைவனுக்கு ஏற்புடையவராகும் பேற்றுக்கு உரிமையாளர் ஆனார்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 33 ஆம் ஞாயிறு (13.11.2022)**

**மலாக் 3:19-20 2தெச 3:7-12 லூக் 21:5-19**

**முன்னுரை**

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கியிருக்கும் நாம் அதை எதிர்கொள்ள கடின உழைப்பு மற்றும் சான்றுபகரக்கூடிய வாழ்வு மூலம் நம்மையே நாம் தயாரிக்க இன்றைய இறைவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. யூதர்களைப் பொறுத்த அளவில் எருசலேம் ஆலயத்தின் அழிவு உலக முடிவின் முன் அடையாளம் என்று நம்பினர். எனவேதான் இயேசு எருசலேம் ஆலயத்தின் அழிவை முன்னறிவித்தபோது உலகமும் முடிவுக்கு வரும் என்று யூதர்கள் நம்பினர்.

உலகம் முடிவுக்கு வரும் என்பதிலும் இயேசு மீண்டும் வருவார் என்பதிலும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது என்பதை விவிலியம் பறைசாற்றுகிறது. ஆனால், அது எப்போது எப்படி நடைபெறும் என்று எண்ணி குழம்புவது சரியல்ல. காரணம் விவிலியம் சொல்கிறது அந்த நாளையும் வேளையையும் பற்றி தந்தைக்கு தவிர வேறு எவருக்கும் தெரியாது. விண்ணகத்திலுள்ள தூதர்களுக்கோ மனிதர்களுக்கோ கூட தெரியாது என்கிறது. எனவே உலக முடிவு எப்போது? எப்படி என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருந்தால் அதற்கு பதில் கிடைக்காது என்பது மட்டுமல்ல அது அவசியமற்ற கேள்வியுமாகும். மாறாக இறைவனது வருகைக்காக விழிப்போடும் தகுந்த தயாரிப்போடும் இருப்பது அவசியப்படுகின்றது. எனவே ஜெபத்திலும் தவத்திலும் மன மாற்றத்திலும் ஈடுபட்டு இயேசுவின் மறுவருகைக்காக விழிப்போடு காத்திருப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

இறைவனின் இரக்கத்தால் பாபிலோனிலிருந்து தாய்நாடு திரும்பி வந்த இஸ்ரயேல் மக்கள் தீக்கிரையான ஆலயத்தைக் கட்டி எழுப்புகின்றனர். இருந்தபோதிலும் பொறுமை, மக்களிடையே நிலவிய ஒழுக்கமின்மை, எதிரிகளின் அச்சுறுத்தல், போன்றவற்றால் மன சோர்வு அடைந்து, ஒரு வேளை ஆண்டவர் தன் உடன்படிக்கையை மறந்து விட்டாரோ என்று ஐயமுற்ற இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவரின் நாள் தீமையை சுட்டெரிக்கும் நெருப்பாகவும், நன்மைக்கு வாழ்வு தரும் திரு



நாளாகவும் அமையும் என்று உரைத்த உறுதிமொழி இன்றைய முதல் வாசகமாக தரப்பட்டுள்ளது.

**இரண்டாம் வாசக முன்னுரை**

துவக்ககால கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை சரியாக புரிதல் இல்லாமல் வாழ்ந்து வந்தனர். ஆண்டவரின் வருகை மிக அண்மையில் இருப்பதாக சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதே சுகம் என்ற மனநிலையோடு சோம்பித் திரிந்தனர். இவர்களுக்கு, புனித பவுல், ஆண்டவர் வரும்வரை சோம்பித்திரியாமல் பாடுபட்டு உழைக்க அழைக்கின்றார். அதே அழைப்பு இன்றைக்கு நமக்கும் தரப்படுகின்றது.

**மன்றாட்டுக்கள்.**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்ந்து அவரது மறுவருகைக்காக விழிப்போடு வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, விண்ணகம் சென்ற இயேசு மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையோடு எங்களது அனுதின அலுவல்களில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு அவரது வருகையின்போது அவரோடு இணைந்திட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, கிறிஸ்துவின் இறுதி வருகையின்போது நல்லவர்கள் நிலைவாழ்வையும் பொல்லாதவர்கள் தண்டனையையும் பெறுவார்கள் என்ற உண்மையை உணர்ந்து நன்மை மட்டுமே செய்து நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, இவ்வுலக வாழ்வுக்கு பின்பு நிலையான விண்ணுலக வாழ்வு உண்டு என்று விசுவசித்து அவ்வாழ்வை நாங்கள் அனைவரும் எமதாக்கிக்கொள்ள எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





**கிறிஸ்து அரசர் பெருவிழா (20.11.2022)**

**2சாமு5:1-3 கொலோ 1:12-20 லூக்23:35-43**

**முன்னுரை**

வரலாற்றில் வல்லரசுகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அழிந்து வரும் காலகட்டத்தில் இன்று நாம் கிறிஸ்து அரசருடைய பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். கிறிஸ்து மெய்யாகவே அரசர் என்பதை இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு உணர்த்துகின்றது. கிறிஸ்துவின் பிறப்பின்போது மெசியா வருவார் அவர் தாவீதின் அரசை மீண்டும் கட்டி எழுப்புவார் என்ற எண்ணம் இஸ்ரயேல் மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றியிருந்தது. எனவேதான் குருத்து ஞாயிறு அன்று யூதர்கள் அரசராக எருசலேம் திருநகருக்கு அழைத்துச் சென்றனர். கிறிஸ்துவின் பிறப்பு அறியப்பட்டபோது கூட வானதூதர் கிறிஸ்து தாவீதின் அரியணையில் அமர்ந்து யாக்கோபின் குலத்தின் மீது அரசாள்வார் அவரது அரசுக்கு முடிவே இராது என்று கூறினர்

எனவே கிறிஸ்து மெய்யாகவே அரசர். இருப்பினும் அவர் மண்ணக அரசர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட அரசர். அவரது அரசு முற்றிலும் வேறுபட்டது. கிறிஸ்துவின் அரசு உண்மை அரசு வாழ்வு தரும் அரசு. புனிதமும் அருளும் கொண்ட அரசு. நீதியும் அன்பும் அமைதியும் விளங்கும் அரசும் ஆகும். அத்தகைய கிறிஸ்துவின் அரசு இம்மையில் வரவேண்டுமென்று மன்றாடுவோம். அதே நேரத்தில் நிறைவு கால அரசை பொறுமையுடன் எதிர்பார்த்து காத்திருப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

சவுல் இறந்தபின்னர் தாவீது இஸ்ரயேல் மக்களின் தலைவராக திருநிலைப்படுத்தப்படுகின்றார். எருசலேமில் தாவீது ஆட்சி செய்தார். ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவரது ஆட்சி இஸ்ரயேலின் பொற்காலம். மெசியா தாவீதின் அரசை மீண்டும் கட்டி எழுப்புவார் என்ற எண்ணம் இஸ்ரயேல் மக்கள் கொண்டிருந்தனர். தாவீது வழங்கிய ஆட்சி முறை இன்றும் நமது தலைவர்கள் தொடர்ந்திட வரம்வேண்டுவோம்.



**இரண்டாவது வாசக முன்னுரை**

கிறிஸ்து யூதர்களின் அரசர் மட்டுமல்ல, அனைத்துலக மக்களின் அரசர். கடவுள் நம்மை இருளின் அதிகாரத்திலிருந்து விடுவித்து தன் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்கு உட்படுத்தினார். விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தும் கிறிஸ்து வழியாகவே கடவுளுடன் ஒப்புரவு ஆனது. தம் இனத்திற்காக